**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No.48 of 2016**

**Prosecution Witness : PW5**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : அந்தோணிசாமி | **Caste** | : |
| **Father's Name** | : | **Calling** | : |
| **Village** | : | **Religion** | : |
| **Taluk** | : | **Age** | : |

**(Accused present.)**

**Dated.04.11.2023.**

**முதல் விசாரணை**

நான் கடைசியாக திருவெறும்பூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து பணிஓய்வு பெற்று தற்போது மணப்பாறையில் வசித்து வருகிறேன். வழக்கு சம்பவத்தின் போது சிறுகனூர் காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 27.07.2014ம் தேதி 6 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்த போது ராஜா என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண்.197/2014, இதச பிரிவுகள் 279, 337, 304(A)ன் கீழ் வழக்கினை பதிவு செய்தேன். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2** ஆகும். பதிவு செய்யப்பட்ட வழக்கு கோப்பினை காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் விசாரிக்க விவரம் சொன்னேன்.

குறுக்கு விசாரணை (எதிரி தரப்பில்)–

அ.சா.1 புகார்தாரர் வழக்கு சம்பவம் எத்தனை மணிக்கு நடைபெற்றதாக சொன்னார் என்றால் விடியற்காலை 3.30 மணிக்கு நடைபெற்றதாக சொன்னார். வழக்கு சம்பவ இடத்திற்கும் சிறுகனூர் காவல் நிலையத்திற்கும்

இடையே 12 கி.மீ தூரம் இருக்கும், சுமார் 1/2 மணி நேரத்தில் வந்துவிடலாம் என்றால் சரிதான். 3.30 மணிக்கு சம்பவம் நடந்ததற்கு காலை 6 மணிக்கு தான் புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 2-1/2 மணி நேர காலதாமதத்திற்கு புகார்தாரர் காரணம் எதுவும் சொல்லவில்லை. முதல் தகவல் அறிக்கையிலும் காலதாமதத்திற்கான காரணம் சொல்லவில்லை. புகாரை எழுதி கொடுத்தார். புகார்தாரர் விபத்தை நேரில் பார்த்ததாகவும், சம்பவ இடத்தில் இருந்ததாகவும் தான் புகாரில் சொல்லியுள்ளார். புகாரில் விபத்து ஏற்படுத்திய வாகனத்தின் பதிவெண்ணை குறிப்பிட்டு எந்த மாதிரியான வாகனம் என்று சொல்லவில்லை என்றால் அரசு பேருந்து TN 01 AN 0061 என சொல்லியுள்ளார். முதல் தகவல் அறிக்கையில் மேற்படி விவரம் சொல்லப்படவில்லை. லாரி மீது மோதிய வாகனத்தின் ஓட்டுநர் யார் என குறிப்பிட்டு எழுதி தரவில்லை என்றால் சரிதான். லாரியின் ஓட்டுநர் என தான் குறிப்பிட்டுள்ளார். புகாரில் காயம்பட்ட நபர்கள் மருத்துவமனைக்கு சென்றதாக தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், இறந்துவிட்டதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதன் அடிப்படையில் 304(A) சட்டப்பிரிவு பதிவு செய்யப்பட்டது என்றால் இன்டிமேஷன் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டது. அந்த இன்டிமேஷனை முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்படவில்லை.

ஒப்பம்/-செ.ராஜ்குமார்,
நீதித்துறை நடுவர் (FAC),
இலால்குடி.

/உண்மை நகல்/

நீதித்துறை நடுவர் (FAC),
இலால்குடி.